2020 மார்ச் 17]

முற்பகல் 10–45

மாண்புமிகு பேரவைத் தலைவர்: வினா வரிசை எண் 110, மாண்புமிகு உறுப்பினர் திருமதி மு. பரமேஸ்வரி, மாண்புமிகு உயர் கல்வித் துறை அமைச்சர் அவர்கள்.

110—

கலைக் கல்லூரி

***41778—திருமதி மு. பரமேஸ்வரி:**

மாண்புமிகு உயர் கல்வித் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

மண்ணச்சநல்லூர் தொகுதி, மண்ணச்சநல்லூரில் கலைக் கல்லூரி துவக்க அரசு முன்வருமா?

மாண்புமிகு திரு. கே.பி. அன்பழகன், உயர் கல்வித் துறை அமைச்சர்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

மண்ணச்சநல்லூர் தொகுதி, மண்ணச்சநல்லூரில் கலைக் கல்லூரி துவங்குவது குறித்த கருத்துரு ஏதும் தற்போது அரசின் பரிசீலனையில் இல்லை என்பதை மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்கள் வாயிலாக மாண்புமிகு உறுப்பினர் அவர்களுக்குத் தெரிவித்துக்கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு உறுப்பினர் திருமதி மு. பரமேஸ்வரி அவர்கள்.

திருமதி மு. பரமேஸ்வரி: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, சுதந்திர இந்தியாவில் எவரும் எட்ட முடியாத இடத்தில் கழகத்தின் கொடியை நட்டு, அரசியல் வானத்தின் அதிசயமாய், அகண்ட பாரதத்தின் மூன்றாம் பெரிய கட்சியாய், நம் திராவிட இயக்கத்தை உயர்த்திப் பிடித்த தமிழர்களின் ஒப்பற்ற தலைவர் நம் அம்மா அவர்கள் துயில் கொள்ளும் திசை நோக்கி வணங்குகின்றேன். (மேசையைத் தட்டும் ஒலி) கொங்கு நாட்டுத் தங்கம், விவசாயிகளின் விடிவெள்ளி, குளங்களையெல்லாம் ஆழப்படுத்திய குடிமராமத்து நாயகன், வேளாண்மை மண்டலம் தந்த விவசாயிகளின் காப்பாளன், ஏழைகளின் எளிமையான முதல்வர், எதிரிக்கு வலிமையான முதல்வர், மாண்புமிகு முதலமைச்சர் அண்ணன் எடப்பாடியார் அவர்களை வணங்குகின்றேன். (மேசையைத் தட்டும் ஒலி) தென்பாண்டிச் சிங்கம், மனிதநேயப் பண்பாளர், ஜல்லிக்கட்டு நாயகன், மாண்புமிகு

துணை முதலமைச்சர் அண்ணன் ஓ.பி.எஸ். அவர்களையும் வணங்குகின்றேன். எனக்கு வாய்ப்பளித்த மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களையும் வணங்குகின்றேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, எங்களுடைய மண்ணச்சநல்லூர் சட்டமன்றத் தொகுதியில் உள்ள மக்கள் அனைவரும் ஏழை எளிய குடும்பத்தைச் சார்ந்தவர்கள். இங்குள்ள மாணவிகள் அனைவரும் தங்களது பள்ளிப் படிப்பை முடித்து கல்லூரிக்குச் செல்ல வேண்டுமென்றால் மண்ணச்சநல்லூரில் செயல்படும் தனியார் கல்லூரிக்கோ அல்லது 20 கிலோ மீட்டர் தொலைவில் உள்ள திருச்சிக்கோதான் சென்று படிக்க வேண்டும். ஆகையினால் எங்கள் மண்ணச்சநல்லூர் தொகுதியிலேயே ஓர் அரசு கலைக் கல்லூரியை அமைத்துத் தர வேண்டும் என்று மாண்புமிகு அமைச்சர் அவர்களை மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களின் வாயிலாகக் கேட்டுக்கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு உயர் கல்வித் துறை அமைச்சர் அவர்கள்.

மாண்புமிகு திரு. கே.பி. அன்பழகன்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் சார்ந்திருக்கக்கூடிய திருச்சி மாவட்டத்தைப் பொறுத்தவரையில், அரசுக் கல்லூரிகள் நான்கும், பல்கலைக்கழகத்தின் உறுப்புக் கல்லூரியாக இயங்கிக்கொண்டிருக்கின்ற 1 கல்லூரியையும் சேர்த்து, ஒட்டுமொத்தமாக 5 கல்லூரிகள் இயங்கிக்கொண்டிருக்கின்றன. அதில், அவருடைய மண்ணச்சநல்லூர் தொகுதியின் சுற்றுவட்டாரங்களில் உள்ள அனைத்துக் கல்லூரிகளும் அடங்கியிருக்கின்ற காரணத்தினாலும், அதே நேரத்தில், ஐந்து கல்லூரிகளையும் சேர்த்து ஏற்கெனவே ஒப்பளிக்கப்பட்ட இடங்களில் 738 இடங்கள் இன்றைக்கு பூர்த்தியடையாமல் இந்த 2019–2020 ஆம் கல்வியாண்டில் காலியாக இருக்கின்றன. அதோடுமட்டுமல்லாமல், திருச்சி மாவட்டத்தைப் பொறுத்தவரையில், 9 அரசு உதவிபெறும் கலை மற்றும் அறிவியல் கல்லூரிகள் இயங்கிக்கொண்டிருக்கின்றன. அதில் ஒப்பளிக்கப்பட்ட இடங்களில் 825 இடங்கள் காலியாக இருக்கின்றன. ஆக, ஒட்டுமொத்தமாகப் பார்க்கின்றபோது, 2019–2020 ஆம் கல்வியாண்டில் திருச்சி மாவட்டத்தைப் பொறுத்தவரையில், கலை மற்றும் அறிவியல் பாடப் பிரிவுகளுக்காக ஒதுக்கப்பட்ட இடங்களில் 1,563 இடங்கள் இன்றைக்கு காலியாக இருக்கின்ற சூழ்நிலை இருக்கின்றது. அதோடுமட்டுமல்லாமல்,

சுய நிதிக் கல்லூரிகளில் 4,144 இடங்கள் காலியாக இருக்கின்றன. அதை நாம் கணக்கில் எடுத்துக்கொள்ளாவிட்டாலும்கூட, அரசுக் கல்லூரி மற்றும் அரசு உதவிபெறும் கல்லூரிகளில் 1,563 இடங்கள் இன்றைக்குக் காலியாக இருக்கின்றபட்சத்தில், புதியதாக ஓர் அரசு கலை மற்றும் அறிவியல் கல்லூரி மண்ணச்சநல்லூர் தொகுதிக்கு தற்போதைக்குத் தேவையில்லை என்பதை மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்கள் வாயிலாக மாண்புமிகு உறுப்பினர் அவர்களுக்குத் தெரிவித்து அமர்கின்றேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு உறுப்பினர் திருமதி மு. பரமேஸ்வரி அவர்கள்.

திருமதி மு. பரமேஸ்வரி: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு அமைச்சர் அவர்களுக்கு நன்றி கூறி அமர்கின்றேன். நன்றி, வணக்கம்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: வினா வரிசை எண் 111, மாண்புமிகு உறுப்பினர் திரு. பி.எம். நரசிம்மன், மாண்புமிகு கைத்தறி மற்றும் துணிநூல் துறை அமைச்சர் அவர்கள்.

111—

கைத்தறி நெசவாளர் கூட்டுறவுச் சங்கம்

***53308—திரு. பி.எம். நரசிம்மன்:**

மாண்புமிகு கைத்தறி மற்றும் துணிநூல் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) திருத்தணி தொகுதி, பள்ளிப்பட்டு ஒன்றியம், கோணசமுத்திரம் கிராமத்தில் கைத்தறி நெசவாளர் கூட்டுறவுச் சங்கம் அமைக்க அரசு ஆவன செய்யுமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

மாண்புமிகு திரு. ஓ.எஸ். மணியன், கைத்தறி மற்றும் துணிநூல் துறை அமைச்சர்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

(அ) மற்றும் (ஆ) திருத்தணி தொகுதி, பள்ளிப்பட்டு ஒன்றியம், கோணசமுத்திரம் கிராமத்தில் கைத்தறி நெசவாளர் கூட்டுறவுச் சங்கம் அமைக்க அரசு ஆவன செய்யுமா என மாண்புமிகு திருத்தணி தொகுதியினுடைய சட்டமன்ற உறுப்பினர் அவர்கள்